# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்டபீடம்

## சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு 111 – 2017

## நிருவாகச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

**நான்கு (04)** வினாக்களுக்கு **மட்டும்** விடை எழுதுக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. "இலங்கை நிருவாகச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைளானவை பிரதானமாக அரசியலமைப்புச்சட்டக் கொள்கையிலிருந்து பெறப்பட்டவையாகும் என்பதுடன் இந்தக் கொள்கைகளே நாட்டின் நிருவாகச் செயற்பாட்டின் மீதான நீதிமுறைக் கட்டுப்பாட்டின் நோக்கெல்லையை ஆளுகின்றன."

   மேற்படி கூற்றின் வலிதாந்தன்மையை விமர்சித்து மதிப்பிடுக.

2. கல்விப் பணிப்பாளர் நாயகமானவர் நாட்டின் பிள்ளைகளுக்குப் பொருத்தமான சூழலில் தரமான கல்வியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குக் கல்விக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டிருந்தார். நாட்டில் தீவிரமாகப் பரவிவரும் டெங்கு நோய் காரணமாக, பணிப்பாளர் நாயகமானவர் பாடசாலை வளவுகளைத் துப்பரவாகவும் நுளம்பு இனப்பெருக்கப் பகுதிகள் இல்லாதவையாகவும் வைத்துக்கொள்ளத் தோதான, தேவையான மற்றும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கினார்.

   (அ) மகளிர் பாடசாலையொன்றின் அதிபரானவர், சகல 11ஆந் தர மாணவிகளுக்கும் அவர்களின் பெற்றோர்களுள் ஒவ்வொருவரையாவது பாடசாலை நாட்களில் கிழமைக்கு இரு மணித்தியாலங்களாவது பாடசாலை வளவைச் சுத்தஞ் செய்வதில் ஈடுபடுவதற்காக பாடசாலைக்கு வரச்செய்யும் படியும் அன்றேல் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படாதுவிடுவதை எதிர்நோக்கும்படி கட்டளையிடுகிறார். மேலும், மாணவர் எவரும் உணவை காகிதத் தாளால் அல்லது பிளாஸ்டிக் தாளால் சுற்றிக்கொண்டோ அல்லது பிளாஸ்டிக் பெட்டியில் வைத்துக் கொண்டோ வருதலாகாது எனவும் பதிலாக நித்தியவெள்ளிச் சாப்பாட்டுப் பெட்டியில் மட்டும் கொண்டுவர வேண்டும் என்றும் எஞ்சுகின்ற உணவை மீள எடுத்துச் செல்லவேண்டுமேயன்றி பாடசாலைக் குப்பைப் பெட்டியினுள் போடுதலாகாது என்றும் அவர் கட்டளையிடுகிறார்.

தொடர்ச்சி -2-

(ஆ) ஆடவர் பாடசாலையொன்றின் அதிபரானவர், பாடசாலையில் சேர்க்கப்படும் குப்பை கூளங்களை, தனது பாடசாலை மாணவர்களின் துணையுடன், உரமாக்கும் இயந்திரத்தின் மூலம் உரமாக மாற்றுகிறார். இயந்திரமானது குறைந்தபட்சமாகவே இயங்குவதைக் காணும் அதிபர், அதனை அதன் அதிகபட்ச ஆற்றலில் இயக்குவதற்காகத் தனியார் வீடுகளிலிருந்தும் வியாபாரத் தலங்களிலிருந்தும் குப்பை கூளங்களைப் பெற்று இயக்குவதுடன் உரத்தை விற்பதன்மூலம் கணிசமானளவு இலாபமும் ஈட்டுகிறார்.

மேற்படி செயல்களின் சட்டபூர்வத்தன்மையை, தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி, ஆராய்க.

3. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னுள்ள எழுத்தாணை விண்ணப்பமொன்றில், இலங்கையில் நிருவாகச் செயலை நீதிமுறையாக மீளாய்வுசெய்யும் ஏதுக்களில் ஒன்றாக விகிதாசாரத்துவக் கொள்கையின் ஏற்புடைமையும் அதன் நோக்கெல்லையும் கேள்விக்குட்படுகின்றன.

நீதிமன்றத்தின் பக்கச்சார்பற்ற ஆலோசகராக (நீதிமன்ற நண்பர் - *amicus curiae)* நீர் உம்மை எண்ணி, அந்தக் கொள்கையின் ஏற்புடைமை மற்றும் நோக்கெல்லை மீது விமர்சனக் குறிப்பொன்றை, தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புபடுத்தி, எழுதுக.

4. மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் ஊழியரான அநுர என்பவர் தொழிற்சங்க நடவடிக்கையின் போது கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கும் செயற்பாடுகளில் பங்குபற்றியிருந்தார் எனச் சந்தேகிக்கப்படுகின்றார். தொழிற் சங்க உறுப்பினர்கள் கூட்டுத்தாபனக் கட்டடத்துள் புகுந்து வன்முறையாக நடந்துகொண்டிருந்தனர். குற்றப்பத்திரமொன்றை அநுர மீது சுமத்தும் கூட்டுத்தாபன முகாமைத்துவம் அவரை விசாரணைக் குழாம் ஒன்றின் முன் சமூகமளிக்குமாறு அழைக்கின்றது. குழாத்தின் கலந்துரையாடல்கள் எதனையும் அவர் செவிமடுக்க முடியவில்லையெனினும் குழாத்தின் உறுப்பினர்களை அவர் தெளிவாகக் காணக்கூடியதாகவிருந்தது. குழாத்தின் உறுப்பினர்களுள் ஒருவர் ஏற்கனவே தனக்கெதிரான ஒழுக்காற்று விசாரணையில் கூட்டுத்தாபனத்தின் வழக்குத்தொடர் அலுவலராகச் செயற்பட்டவரென்பதையும் அந்த விசாரணையின் பயனாகத் தான் எச்சரிக்கப்பட்டிருந்தார் என்பதையும் அநுர உணர்ந்து கொள்கிறார். மேலும் தனது தொழிற்சங்கச் சட்ட அலுவலர் ஒருவர் தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்த அனுமதிக்குமாறு அவர் விடுத்த வேண்டுகோள் குழாத்தால் நிராகரிக்கப்படினும், சாட்சியாளர்களைக் குறுக்கு விசாரணை செய்ய அவர் அனுமதிக்கப்பட்டார். மேலும் அவர் வேண்டியபோதெல்லாம் விசாரணைகளை ஒத்திவைக்க குழாம் உடன்பட்டது. விசாரணைக் குழாம் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு அவர்

தொடர்ச்சி -3-

குற்றவாளியாவார் எனக் கண்டதுடன் கூட்டுத்தாபனம் அவரது சேவையை முடிவுறுத்தியது. சேவை முடிவுறுத்தலுக்கான காரணங்களை அறிய அவர் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

கூட்டுத்தாபனத்தின் செயலின் சட்டபூர்வத்தன்மை பற்றி அநுர உம்மைக் கலந்தாலோசிக்கின்றார். தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புபடுத்தி அவருக்கு ஆலோசனை வழங்குக.

5. ''உரிமைகள் அடிப்படையான மீளாய்வின் விரிவாக்கமொன்றே நெறிமுறையான எதிர்பார்ப்பு எனும் கருத்தேற்பாகும். இது நிருவாகச் செயலை நீதிமுறையாக மீளாய்வு செய்கின்ற அடிப்படையான வலுவிகல்தற் கோட்பாட்டின் அண்மைக்கால அபிவிருத்தி ஒன்றாக மென்மேலும் நீதிமன்றங்களால் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது.''

நீர் உடன்படுகிறீரா? தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி ஆராய்க.

6. வடமத்திய மாகாண அரிசி உற்பத்தியாளர் கூட்டுறவு அபிவிருத்திச் சபை என்பது வடமத்திய மாகாணசபையால் ஆக்கப்பட்ட நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நியதிச்சட்டச் சபையொன்றாகும். இந்த நியதிச்சட்டத்தின் பிரகாரம் இந்தக் கூட்டுறவு அபிவிருத்திச் சபையானது ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருப்பதுடன் அதில் ஒருவர் பதவிவழி உறுப்பினராக விருக்கையில் மற்றைய எண்மர் மாகாணத்தின் இரண்டு மாவட்டங்களிலிருந்தும் தலா நான்கு உறுப்பினர் என்ற அடிப்படையில் அங்கத்துவம் செய்கின்றனர். எட்டு உறுப்பினரும் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள அரிசி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களால் சனநாயக வழிமுறையாக மாவட்ட ரீதியில் நடாத்தப்படும் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அந்த மாகாணத்தின் வேறுபட்ட பிரதேசங்களில் உற்பத்திசெய்யப்பட வேண்டிய அரிசி வகை மற்றும் அளவு, அரிசியின் ஆகக் குறைந்த மற்றும் அதியுட்ச மொத்தவிலை போன்ற இன்னோரன்னவற்றைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை நியதிச்சட்டமானது இந்தக் கூட்டுறவு அபிவிருத்திச் சபைக்கு வழங்குகிறது. இந்தச் சபையின் உறுப்பினர் எவரும் சபையின் தீர்மானத்தில் திருப்தியடையவில்லையாயின் மாகாணக் கூட்டுறவு அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம் எனவும் அத்தகைய மேன்முறையீடை ஆராய்ந்து அமைச்சருக்குப் பரிந்துரைகள் செய்வதற்காக ஒரு மீளாய்வுக் குழுவை அமைச்சர் தாபிக்கவேண்டும் எனவும் நியதிச்சட்டம் மேலும் ஏற்பாடுசெய்கின்றது. அந்த விடயத்தில் இறுதித் தீர்மானத்தை எடுக்க அமைச்சருக்குத் தத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சரின் தீர்மானமானது முற்றும் முழுதானது என்றும் எந்தச் சட்டநீதிமன்றத்திலும் அது கேள்விக்கு உட்படுத்தப்படலாகாது என்றும் நியதிச்சட்டம் ஏற்பாடு செய்கின்றது.

தொடர்ச்சி -4-

அந்த மாகாணத்தின் பின்தங்கியதும் தொலைவானதுமான இரு பிரதேசங்களைச் சார்ந்த இரு சபை உறுப்பினர்கள், நுகர்வோர் மத்தியில் வரவேற்பைப் பெறாத வகையான குறித்த அரிசி வகையொன்றை மட்டும் அவர்களது பிரதேசங்களில் உற்பத்தி செய்யவேண்டும் என்று சபையில் கொண்டுவரப்பட்ட முன்மொழிவை எதிர்கின்றனர் ஆயினும், சபையானது மேலதிக வாக்குகளால் அந்த முன்மொழிவை அங்கீகரிக்கின்றது. இந்த உறுப்பினர்கள் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்ய அந்த அமைச்சர் அவர்களின் மேன்முறையீட்டை ஆராய்வதற்கு மீளாய்வுக் குழுவொன்றைத் தாபிக்க மறுக்கின்றார்.

அமைச்சரின் தீர்மானத்தால் பாதிப்புக்குள்ளான அவர்கள், அமைச்சரது தீர்மானத்தின் சட்டபூர்வத்தன்மையை நீதிமுறையாகச் சவாலுக்கு உட்படுத்தும் நோக்குடன் உங்களை நாடுகின்றனர். தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புபடுத்தி அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

7. "எழுத்தாணை நியாயாதிக்கம் தொடர்பிலான சட்ட அந்தஸ்துப் (*locus standi* - வழக்கிடு தகைமை) பற்றிய விதிகளை விரிவுபடுத்துவதற்கான அல்லது மட்டுப்படுத்துவதற்கான காரணமானது வேறுபட்ட ஏதுக்களில் தங்கியிருக்கின்றது. கடந்த ஆண்டுகளில் இந்த விதிகளானவை நெகிழ்ச்சியாக பொருளமைக்கப்பட்டிருக்கின்றன."

நீர் உடன்படுகிறீரா? இலங்கையின் அண்மைக்கால நீதித்துறைத் தீர்ப்புகளின் பின்னணியில் மேற்படி கூற்றை விமர்சித்து மதிப்பிடுக.

*********